செய்தி வெளியீடு எண் ~~264~~ 270 /2018 நாள் 7/5/2018

**743 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டுப்போட்டிகள் நடத்திட ரூ.44,58,000/-க்கான காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கிராம அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி இளைஞர்களை ஊக்குவித்திட ஆண்டுதோறும் கிராம அளவிலான விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகிறது. அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில் உள்ள 743 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட தலா ரூ.20 ஆயிரம் வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் தலா ரூ.6000/- நிதி போட்டி ஏற்பாடு செலவினத்திற்கும் ரூ.6000/- நிதி விளையாட்டு உபகரணங்கள் வாங்கிடுவதற்கும், ரூ.8000/- நிதி விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கிடுவதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக விளையாட்டு போட்டிகள் நடத்திட முன்னேற்பாட்டுப் பணி செலவினத்திற்கு தலா ரூ.6000/- வீதம் 20 வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் 743 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டுப்போட்டிகள் நடத்திட மொத்தம் ரூ.44,58,000/-க்கான காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் ஒப்படைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அனைத்து ஊராட்சி செயலாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்களை கொண்டு குழு அமைத்து வரும் ஜுன் மாதத்தில் போட்டிகளை நடத்தி முடித்திட அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்திரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.பெரியசாமி, மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.ரமேஷ், முதன்மை கல்வி அலுவலர் திரு.மார்ஸ், பளுதூக்கும் பயிற்சியாளர் திரு.விநாயகமூர்த்தி மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர். வேலூர்.